இந்தியாவின் 78ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு இந்திய உயர் ஸ்தானிகர் கௌரவ சந்தோஷ் ஜா அவர்கள் வழங்கிய செய்தி

**உயர் ஸ்தானிகரின் செய்தி**

இலங்கையைச் சேர்ந்த எனது அன்பான சகோதர சகோதரிகளே,

நமஸ்கார், வணக்கம், ஆயுபோவன்!

இந்தியாவின் 78ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு நல்வாழ்த்துகள். சுதந்திரத்தின் நூற்றாண்டு நிறைவினைக் குறிக்கும் 2047 ஆம் ஆண்டில் விக்ஷித் பாரத் எனப்படும் அபிவிருத்தி அடைந்த நாடாக நிலைமாற்றமடைவது என்ற உறுதிப்பாடு மற்றும் திடசங்கல்ப்பத்துடன் இந்தியா இந்த சுதந்திரதினத்தைக் கொண்டாடுகின்றது,

கடந்த வருடத்தில் பதிவான 8 வீத பொருளாதார வளர்ச்சியுடன் இந்தியாவின் பொருளாதாரம் இன்று 3.9 டிரில்லியனாக மதிப்பிடப்பட்டுள்ளது. ஐந்தாவது பாரிய பொருளாதார நாடாக உள்ள இந்தியா, அடுத்துவரும் ஐந்தாண்டு காலப்பகுதிக்குள் மூன்றாவது பாரிய பொருளாதார நாடாவதை இலக்காகக் கொண்ட பாதையில் தற்போது பயணிக்கின்றது. இதேவேளை, புதுப்பிக்கத்தக்க சக்தி துறையினை கொண்டுள்ள நாடுகளில் உலகளவில் நான்காம் இடத்தில் இந்தியா காணப்படும் அதேவேளை, இந்தியாவின் பசுமை இலக்குகளின் ஒத்திசைவான முன்னேற்றத்துடன் இணைந்ததாகவும் இந்த பொருளாதார வளர்ச்சி காணப்படுகின்றது. அதுமட்டுமல்லாமல் இந்த திகைப்பூட்டும் எழுச்சியானது ஜனநாயக ஆட்சி முறைமையின் கீழ் இடம்பெறுகின்றமை மிகவும் பிரமிப்புக்குரியவிடயமாகும். எவரையும் விட்டுவிடாமல் அனைவரையும் உள்வாங்கி, சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தல் முறைமையின் கீழ் 642 மில்லியன் வாக்காளர்கள் தமது வாக்குகளை அளித்தமை ஜனநாயகத்தின் அதி உன்னதமான வெற்றி என்று கூறி இந்திய தேர்தல்கள் போற்றப்படுகின்றன.

இந்தியா தொடர்ந்து சுபீட்சமடைந்துவரும் நிலையில் கூட, கடல்மார்க்கமாக மிகவும் கிட்டிய அயல்நாடான இலங்கையுடன் இணைந்து சுபீட்சமடைவதையே விரும்புகின்றது. மிகவும் கவர்ச்சிகரமான ஒரு மீட்சியினை பதிவுசெய்திருக்கும் இலங்கை, மறுசீரமைப்பு, புத்தெழுச்சி மற்றும் புத்துயிர்ச்சி ஆகியவற்றை நோக்கிய பாதையில் செல்கின்றது. சாத்தியமான ஒன்றிணைவுகளை உணர்வதற்கும், பிராந்திய வளர்ச்சியின் வெற்றியை நோக்கிய செல்நெறியினை மேலும் உந்துவதற்குமாக, இந்திய இலங்கை பங்குடைமையானது இணைப்புகளை அதன் மையப்பொருளாகக்

கொண்டுள்ளது. அத்துடன் வான், கடல், வர்த்தகம். டிஜிட்டல், சக்தித்துறை மற்றும் இருநாட்டு மக்களிடையிலுமான தொடர்புகள் போன்ற சகல பரிமாணங்களிலும் இணைப்புகளை மேம்படுத்துவதில் அதிக கவனம் செலுத்தப்படுகின்றது.

கடந்த ஆறு மாதங்களாக இந்த விடயத்தில் இருநாடுகளும் கணிசமான முன்னேற்றத்தை அடைந்துள்ளன. அண்மித்த காலப்பகுதியில் இலங்கையின் சக்தி பாதுகாப்பினை மேலும் வலுவாக்குதல் மற்றும் நீண்டகால அடிப்படையில் பசுமை சக்தியினை ஏற்றுமதிக்கான திறனுடன் கட்டிஎழுப்புதல் ஆகியவற்றை இலக்காகக்கொண்டு இருநாடுகளுக்கும் இடையிலான ஒன்றிணைந்த மின் வலையமைப்பினை நிறுவுவதற்கான வழிமுறைகள் உருவாக்கம் இறுதிக்கட்டத்தினை எட்டியுள்ளது. அதேவேளை வான் மற்றும் கடல் மார்க்கமான இணைப்பிற்கான வழித்தடங்களும் முனைகளும் ஏற்கனவே இணைக்கப்பட்டுள்ளன. இவற்றிற்குமேலாக, மிகுந்த இலட்சியத்துடனான எண்ணக்கருவான இந்திய இலங்கை தரை மார்க்க இணைப்பு வழித்தடம் குறித்த நடவடிக்கைகள் முன்னேற்றமடைந்து வரும் நிலையில், முக்கிய திருப்புமுனையான இந்த எண்ணக்கருவை யதார்த்தமாக்கும் முயற்சியில் இருதரப்பினரும் தமது செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இலங்கைக்கான அதிகளவான சுற்றுலாப் பயணிகளைக் கொண்ட நாடாகவும், பாரிய வர்த்தக மற்றும் முதலீட்டுப் பங்காளராகவும் தொடர்ந்து இந்தியா முன்னணிவகித்து வரும் நிலையில், இவ்வாறான முன்னரங்கங்களை மேலும் விஸ்தரிப்பதற்குரிய பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு உடன்படிக்கை ஒன்றுக்கான வர்த்தக பேச்சுகள் முன்னேற்றமடைந்துவரும் நிலையில் இவ்விடயம் குறித்த இறுதிக்கட்டப் பேச்சுகள் கடந்த ஜூலை மாதம் கொழும்பில் நடைபெற்றுள்ளன. FinTech துறையினை மேம்படுத்தும் முகமாகவும் இந்திய சுற்றுலாப் பயணிகளின் இலங்கைக்கான பயணத்தினை மேலும் எளிமையாக்கும் இலக்குடனும் UPI முறைமையினை அடிப்படையாகக் கொண்ட கொடுப்பனவு முறைமையானது இந்த வருட ஆரம்பத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அன்பான நண்பர்களே மேலே கூறப்பட்ட அனைத்து திட்டங்களும் இந்தியாவால் உள்ளூரில் நிரூபிக்கப்பட்ட திறன்கள் சார்ந்த துறைகளைச் சேர்ந்தவையாகும். தனது நாகரீக இரட்டையர் மேலும் பல நன்மைகளை பெற்றுக்கொள்ளவேண்டுமென்ற நோக்குடன் தனது வெற்றிகளை பகிர்ந்துகொள்ளும் இந்திய ஆர்வத்தின் அடிப்படையில் இந்த திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இலங்கையை கடன்சுமைக்குள் வீழ்த்திவிடாமல் வளர்ச்சிகாண வைப்பதே இவ்வாறான திட்டங்களின் எதிர்பார்ப்பாகும். பரஸ்பர வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்துடன் இந்திய இலங்கை உறவுகளும்

சமாந்தரமாக பயணிக்க வேண்டுமென்பதே இப்பெருமுயற்சியின் முக்கிய குறிக்கோளாகும்.

ஓராயிரம் வார்த்தைகளைவிட ஒரு புகைப்படம் கூறும் செய்தி கனதியானதென கூறப்படுகின்றது. இலங்கை ஜனாதிபதி அவர்களருகில் நின்றவாறு இந்திய பிரதமர் ஶ்ரீ நரேந்திர மோடி அவர்கள் தனது மூன்றாவது பதவிக் காலத்துக்காக சத்தியப்பிரமாணம் செய்திருந்தமை இந்தியாவின் அயலுறவுக்கு முதலிடம் கொள்கை மற்றும் சாகர் கோட்பாடு ஆகியவற்றை மீள உறுதிப்படுத்துகின்றது. காலத்தால் அழியாத நம்பிக்கை மற்றும் நல்லெண்ணத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட இந்த நட்புறவுக்கான பற்றுறுதியானது ஒன்றிணைந்த சுபீட்சத்தின் எதிர்காலமாக நிலைமாற்றமடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஜெய் ஹிந்த்

வணக்கம், ஆயுபோவன், தன்யவாத்